செ வெ எண்: 269 நாள்: 11.05.2011

# பத்திரிக்கைச் செய்தி

## கலை பண்பாட்டுத் துறை

### தமிழ்நாடு முழுவதும் அரசின் சார்பில் கோடை கால கலைப்பயிற்சி

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையில் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர் விடுமுறையை பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும், நலிந்து வரும் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கவும், மாணவ மாணவிகளின் கலைத் திறமைகளை கண்டறிந்து அவற்றை ஊக்கப்படுத்தவும் கோடை கால கலை பயிற்சியினை நடத்தி வருகிறது.

2011ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் செயல்படும் சவகர் சிறுவர் மன்றங்கள் மூலம் இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பரதநாட்டியம், குரலிசை, கீபோர்டு, மிருதங்கம் தபேலா, சிலம்பாட்டம், நாட்டுப்புற நடனம், வீணை, டிரம்ஸ், நாடகம், ஜிம்னாஸ்டிக்ஸ், ஓவியம், கணினி, தையல், யோகா, கராத்தே ஆகிய 15 கலைகளில் சென்னை மயிலாப்பூரிலும், பிற மாவட்டங்களில் இவற்றில் ஏதேனும் 4 வகை கலைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் சுமார் 4000 மாணவ மாணவியர் இக்கலை பயிற்சியினை பெற்று வருகின்றனர். தஞ்சாவூரில் அதிகபட்சமாக 500 மாணவ மாணவிகளும், அதற்கு அடுத்தபடியாக சேலம், விழுப்புரம் நகரில் 310 மாணவர்களும், திருநெல்வேலியில் 235 மாணவர்களும், நாகர்கோவிலில் 267 மாணவர்களும், இராமநாதபுரத்தில் 260 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சென்னை மயிலாப்பூரில் 25.04.2011 முதல் 28.05.2011 முடிய 34 நாட்களும், பிற இடங்களில் 10 நாட்கள் வீதம் இக்கலை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் அரசு சார்பில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாவட்டங்களில் கலை பண்பாட்டுத் துறை மண்டல உதவி இயக்குநர்களும், சென்னையில் கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திரு. ப.அ.மணி, இ.வ.ப., அவர்களும் நேரடியாக இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டை விட இவ்வாண்டு சுமார் 20% மாணவ மாணவியர் அதிகம் கலந்து கொண்டு

பயிற்சி பெற்றுள்ளனர். மாணவ மாணவியருக்கு கலையார்வம் ஆண்டுதோறும் அதிகரித்து வருவது இதன்மூலம் தெரிகிறது. கோடை கால கலைப்பயிற்சியில் பங்கு பெறும் மாணவர்களில் மிகச்சிறந்த மாணவர்களில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு 20.05.2011 முதல் 29.05.2011 முடிய 10 நாட்கள் திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையிலுள்ள ஜமுனா மரத்தூரில் நடைபெறும் மாநில அளவிலான கலைப்பயிற்சியில் அரசின் சார்பில் இலவசமாக கலந்துகொள்ள உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் மண்டல உதவி இயக்குநர் திரு. ஹேமநாதன் செய்து வருகிறார்.

அனைத்து மாவட்டங்களில் செயல்படும் சவகர் சிறுவர் மன்றங்களிலும் ஜூன் மாதம் முதல் இக்கலை பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற உள்ளது. அம்மாவட்டத்திலுள்ள மாணவ மாணவியர் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இலவசமாக அளிக்கப்படும் இவ்வகை பயிற்சிகளுக்கு ஆண்டுச்சந்தாவாக ரூ. 150/– மட்டுமே அரசின் சார்பில் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. சவகர் சிறுவர் மன்றத்தில் கலைப்பயிற்சி பெறும் மாணவ மாணவியர் அகில இந்திய அளவில் புதுதில்லியில் நடத்தப்பெறும் அகில உலகக் குழந்தைகள் முகாம், தேசிய சுற்றுச்சூழல் குறித்த இளம் அறிவியல் மாநாடு, தேசிய புகைப்படக் கலைப்பயிற்சி போன்றவற்றில் அரசின் சார்பில் இலவசமாகக் கலந்து கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திரு ப.அ. மணி, இ.வ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

10.5.11

ஆணையருக்காக

10/5/2011

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9